முருகப்பெருமான் துணை
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 670**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

30.07.2021, வெள்ளிக்கிழமை

1. தர்மசக்தி கொண்ட அரங்கனே
தரணிகாக்க வந்த தேசிகனே
ஆறுமுகன் என் அவதாரமாக
அகிலத்தை மீட்க மாதவம்புரிந்த தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
ஆசி தந்து உலகில் ஞானவான்களே
அடியவர்களாக உருவாக்கி கலியுகத்தை மீட்க
3. மீட்க சன்மார்க்க நெறி கொண்ட
மேலான தர்மம் புரிந்து வருகின்ற
மாட்சிமைமிக்க அரங்கனே மாதவசியே
மகானே உந்தன் வழி உலகம் வரவர
4. வருகவே வையகம் மாற்றம் பெறும்
வரலாற்றை மாற்றி படைக்கவேண்டி
ஐயன் என் அவதாரமாக வந்த
அரங்கனே ஆறுமுக ஞான தேசிகனே
5. தேசிகனே உன் தவம் வெற்றிகொள்ளும்
தேசிகனே உன் தர்மம் தான் உலகை ஆளும்
ஆசிதந்து யான் உன்னோடு இருக்க
அரங்கனே என வேண்டும் அத்துனைபேருக்கும்
அவரவர்க்கும் ஆறுமுகன் என் அருளும் துணையும் உண்டுஉண்டு
6. உண்டுஉண்டு ஓங்கார நாதம் ஒலித்து
உண்டுஉண்டு ஓங்கார நாதம் எழுப்பி
உலகத்தில் எங்கும் தர்மம் நடைபெற்று வருகின்றதோ
அங்கெல்லாம் ஆறுமுகன் யான் உன் ஆசியாக
7. ஆற்றல்பட உன் சக்தியாக இறங்கி காத்தருள்வேன்
அருளவே அரங்கன் கரம்பட்ட தீட்சைவழி
அகிலத்தில் தொண்டு புரியும் மக்களெல்லாம் மகிழ அவர்கள் குடி சிறக்க
மண்ணுலகம் மாற்றம் பெற பெருந்துணை புரிவேன் ஆறுமுகன் யான்

8. யானும் நீக்கமற அன்பன் தொண்டர்களுக்கு
உயர் ஆசி தந்து உடனிருக்க
ஞானம் வேண்டி வரும் மக்கள் எல்லோருக்கும்
ஞானிகளாகும் வாய்ப்பு அரங்கன் சேவை மூலம் வாய்க்கக்கூடும்

9. கூடவே அரங்கனுள் யான் குறைவின்றி நித்தம்
ஈடேறும் உயர் ஞானம் இடைஇடை தவபலம் கூட்டி அருளிவர
இனிதே அரங்கனை தொடரும் மக்கள் மூலமே
இந்த உலகம் பெருமாற்றம் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–